# அபிராமி பட்டர் அருளிய அபிராமி அம்மை பதிகம்
AbirAmi amman pathikam by AbirAmi Bhutter (in Tamil, TSCII format)

Tamil EText preparation: Dr. Kumar Mallikarjunan, Blacksburg, VA, U.S.A. This Etext file has the verses in tamil script in TSCII-encoding. So you need to have a TSCII-conformant tamil font to view the Tamil part properly. Several TSCII conformant fonts are available free for use on Macintosh , Unix and Windows 95/98/NT/3.11) platforms at the following websites:

- http://www.tamil.net/tscii/
- http://www.geocities.com/Athens/5180/tsctools.html

In case of difficulties send an email request to kumar@vt.edu.

© Project Madurai 1999
Project Madurai is an open, voluntary, worldwide initiative devoted to preparation of electronic texts of tamil literary works and to distribute them free on the Internet. Details of Project Madurai are available at the website http://www.tamil.net/projectmadurai

You are welcome to freely distribute this file, provided this header page is kept intact.

தூயதமிழ்ப் பாமாலை சூட்டுதற்கு மும்மதநூல்
வாயைங் கரன்றாள் வழுத்துவாம் - நேயர்நிதம்
எண்ணும் புகழ்க்கடவூர் எங்கள்அபி ராமவல்லி
நண்ணும்பொற் பாதத்தில் நன்கு.

கலையாத கல்வியும் குறையாத வயதுமோர் கபடு வாராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும் கழுபிணி யிலாத உடலும்
சலியாத மனமும் பகலாத மனைவியும் தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும் தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியும் கோணாத கோலுமொரு துன்பமில் லாத வாழ்வும்
துய்யநின் பாதத்தில் அன்பும் உதவிப்பெரிய தொண்டரொடு கூட்டு கண்டாய்;
அலையாழி அறிதுயிலும் மாயனது தங்கையே! ஆதிகடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி! அருள்வாமி! அபிராமியே!

வாடாமல் உயிரெனும் பயிர்தழைத் தோங்கிவர அருள்மழை பொழிந்தும் இன்ப
வாரிதியிலே நின்ன தன்பெனுஞ் சிறகினால் வருந்தாமலேயணைத்துக்
கோடாமல் வளர்சிற்றெறும்புமுதல் குஞ்சரக் கூட்டமுதலான சீவ
கோடிகள் தமக்குப் புசிக்கும் புசிப்பினைக் குறையாமலே கொடுத்து
நீடாழி உலகங்கள் யாவையும் நேயமாய் நின்னுதர பந்தி பூக்கும்
நின்மலி! அகிலங்களுக்கு அன்னை என்றோதும் நீலியென்று ஓது வாரோ?
ஆடாத நான்மறையின் வேள்வியால் ஓங்குபுகழ் ஆதிகடவூரின் வாழ்வே
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி! அருள்வாமி! அபிராமியே!

ஞானந்தழைத்து உன் சொரூபத்தை அறிகின்ற நல்லோர் இடத்தினிற் போய்
நடுவினில் இருந்து வந்தடிமையும் பூண்டவர் நவிற்றும் உபதேச முட்கொண்டு
ஈனந்தனைத் தள்ளி எனது நானெனுமானம் இல்லாமலேது ரத்தி

இந்திரிய வாயில்களை இறுகப் புதைத்து நெஞ்சு இருளற விளக்கேற்றியே
ஆனந்தமான விழி அன்னமே! உன்னை என் அகத்தாமரைப்போதிலே
வைத்து வேறே கலையற்றும் உற்றபர வசமாகி அழியாததோர்
ஆனந்த வாரிதியில் ஆழ்கின்றதென்று காண் ஆதிகடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி அருள்வாமி! அபிராமியே!

மிகையுந்துரத்த வெம்பிணியுந்துரத்த வெகுளியானதுந்துரத்த
மிடியுந்துரத்த நரை திரையும் துரத்த மிகுவேதனைகளும் துரத்த
பகையும் துரத்த வஞ்சனையும் துரத்த பசியென்பதுந்துரத்த
பாவந்துரத்த பதி மோகந்துரத்த பலகாரியமும் துரத்த
நகையும் துரத்த ஊழ்வினையும் துரத்த நாளுந்துரத்த வெகுவாய்
நாவறன் கோடிகால் தளர்ந்திடும் என்னையே நமனும் துரத்துவானோ?
அகில உலகங்கட்கும் ஆதார தெய்வமே ஆதிகடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி! அருள்வாமி! அபிராமியே!